அ.தி.மு.க. ஆட்சியில் 2015–ல் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததால் 289 பேர் மரணம் மறந்துவிட்டதா?

# பருவ மழையையொட்டி கழக அரசு எடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் கொச்சைப்படுத்தும் பழனிசாமி!

## அற்பக் காரணங்களைச் சொல்லி அரசியல் செய்ய வேண்டாம் – அமைச்சர் கே.என்.நேரு கண்டனம்!

சென்னை, அக்.16-

அ.தி.மு.க. ஆட்சியில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளாததால் 2015-ல் ஏற்பட்ட வெள்ளத்தில் சென்னை மாநகரில் மட்டும் 289 பேர் மரணம் நினைவிருக்கிறதா? எனவும், வடகிழக்குப் பருவமழையினையொட்டி தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையினை கொச்சைப்படுத்துவதா? என்றும் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமிக்கு நகராட்சி நிருவா கத்துறை அமைச்சர் கே.என். நேரு கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவரது கண்டன அறிக்கை வருமாறு:-

மழையால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபடாமல் சென்னையில் ஆலோசனைக் கூட்டம் நடத்துகிறார் முதலமைச்சர்' என வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என உளறி அறிக்கை விட்டிருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி.

பழனிசாமி பத்திரிகைகளையும் படிப்பதில்லை; தொலைக்காட்சிகளையும் பார்ப்பதில்லை என்பது அவருடைய அறிக்கையை பார்த்தாலே தெரிகிறது.

அக்டோபர் மாதம் வடகிழக்கு பருவமழை தொடங்கும் நிலையில் அதற்காக எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து கடந்த 30-ஆம் தேதி தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடந்ததே,அதுபற்றி பழனிசாமி அவர்களுக்குத் தெரியுமா?

### தூங்கி எழுந்து அறிக்கை!

அன்றைக்கு நடந்தது தமிழ்நாடு முழுமைக்கான ஆலோசனைக் கூட்டம். அதில்தான் "பருவ மழையை எதிர் கொள்ள முறையான செயல்திட்டத்தினை மாவட்ட நிர்வாகம் உருவாக்க வேண்டும். உயிரிழப்புகளைத் தடுக்க வேண்டும்" என முதலமைச்சர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தார். இதெல்லாம் செய்தி ஊடகங்களில் வெளியானது. அதனை எல்லாம் படிக்காமல் இப்போது தூங்கி எழுந்து அறிக்கை விட்டிருக்கிறார். அன்றைக்கு முதலமைச்சர் எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் கோவை, திருப்பூர், புதுக்கோட்டை, சேலம், மதுரை உள்ளிட்ட மாவட்டங்களில் கனமழை பெய்திருந்தாலும் பெரிய பாதிப்புகள் ஏற்படாமல் மக்கள் பாதுகாக்கப்பட்டனர். அந்த மாவட்டங்களுக்குத் தேவையான நிவாரண உதவிகள், மீட்புப் பணிகள் செய்வது தொடர்பாக கலெக்டர்களுக்கு முதலமைச்சர் கட்டளைகளைப் பிறப்பித்திருக்கிறார்.

### வரலாறு இல்லாதவரின் வயிற்றெரிச்சல்!

அதே போன்ற ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இப்போது சென்னையும் அதைச் சுற்றியுள்ள மாவட்டங்களுக்கும் முதலமைச்சர் ஆலோசனை கூட்டம் நடத்தியிருக்கிறார். சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களுக்கு ரெட் அலர்ட் எச்சரிகை விடப்பட்டிருக்கும் நிலையில் அதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்காக ஆலோசனைக் கூட்டம் நடத்தாமல் போயிருந்தால் "ஆலோசனைக் கூட்டத்தைக்கூட ஏன் நடத்தவில்லை?" என பிறகு பழனிசாமி பொங்கியிருப்பார். அதிமுக ஆட்சியில் இப்படியெல்லாம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக ஆலோசனைக் கூட்டம் போட்ட வரலாறு இருக்கிறதா? வரலாறு இல்லாதவரின் வயிற்றெரிச்சல்தான் இந்த அறிக்கை.



2015 பெரு வெள்ளத்தில் செம்பரம்பாக்கம் ஏரி நிரம்பி வழிந்து அதனை மொத்தமாகத் திறந்துவிட்டு சென்னையை மூழ்கடித்து 289 பேர் பலியாக காரணமானவர்கள் எல்லாம் இன்றைக்குச் சாத்தான் வேதம் ஓதுவது போலப் பேசுகிறார்கள். '2015-ஆம் ஆண்டு சென்னையில் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டதற்கு மனித தவறே காரணம். தனியார் நிலத்தை பாதுகாக்கவே செம்பரம்பாக்கம் ஏரி திறக்கப்பட்டது' என சி.ஏ.ஜி அறிக்கையிலேயே குறிப்பிட்டார்கள். அப்படியான எந்த நிகழ்வும் நடக்கக் கூடாது என்பதற்காக முன்னெச்சரிக்கையாக முதலமைச்சர் ஆய்வுக் கூட்டம் போட்டால், 'எதற்காக ஆலோசனைக் கூட்டம்' எனக் கேட்கும் எதிர்க் கட்சித் தலைவரை பார்த்து தமிழக மக்கள் சிரிக்கத்தான் செய்வார்கள்!

6 நாட்களுக்கு முன்பு கூட மாவட்டங்களில் வளர்ச்சிப் பணிகளைத் துரிதப்படுத்தவும் இதர பணிகளைக் கண்காணித்திடவும் மாவட்டங்களுக்குப் பொறுப்பு அமைச்சர்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின அவர்கள் நியமித் தாரே... அதுகூட பழனிசாமி அவர்களுக்கு தெரியாது? மாவட்ட பொறுப்பு அமைச்சர்கள் மழையால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் நிர்வாகத்தோடு சேர்ந்துதான் மீட்பு, நிவாரண நடவடிக்கைகளை முடுக்கி விட்டார்கள்.

### ஸ்டிக்கர் ஒட்டியவர்களின் விளம்பர மோகம்!

பேரிடர் காலத்திலும் தனக்கு விளம்பரம் கிடைக்காதா? எனக் காத்திருக்கிறார் பழனிசாமி. பேரிடர் காலங்களில் தன்னார்வலர்கள் அளித்த நிவாரண பொருட்களில் எல்லாம் ஜெயலலிதாவின் ஸ்டிக்கர்களை ஒட்டியவர்களிடம் விளம்பர மோகம்தானே இருக்கும்! 'துணை முதல்வர்' பதவியை இன்றைக்குப் பரிகாசம் செய்யும் பழனிசாமி அவர்களுக்கு, தர்மயுத்தம் நடத்திக் கொண்டிருந்த பன்னீர்செல்வத்திற்குத் துணை முதல்வர் பதவியை கொடுத்தது ஏன்? தன்னை துணை முதல்வர் ஆக்க வேண்டும் என எஸ்.பி. வேலுமணி மிரட்டிய போது அவருக்குத் தராமல், தன் ஆட்சியை காப்பாற்றிக் கொள்ளப் பன்னீர்செல்வத்திற்குத் துணை முதல்வர் பதவியைக் கொடுத்தது எதற்காக? தன் ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ளத் துணை முதல்வர் பதவியையே கேடயமாகப் பயன்படுத்திய பழனிசாமி எல்லாம் 'விளம்பரம்' பற்றிப் பேசுவதற்கு அருகதை இருக்கிறதா?

பட்ஜெட்டிலும் மானிய கோரிக்கை விவாதங்களிலும் அமைச்சர்கள் அளிக்க வேண்டிய அறிவிப்புகளை எல்லாம் பறித்து சட்டமன்ற விதி 110ன் கீழ் தானே அறிவித்து விளம்பரம் தேடியவர்தானே பழனிசாமி. தான் ஒருவர் மட்டுமே பணியாற்றுவது போன்ற மாயையை அன்றைக்கு உருவாக்கிய உங்கள் முகத்தை கண்ணாடியில் பார்த்துக் கொள்ளுங்கள்.

சென்னை மாநகராட்சி ஆலோசனைக் கூட்டத்தில் துணை முதல்வர் மட்டுமே கலந்து கொண்டிருக்கிறார். சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் ஏன் பங்கேற்கவில்லை' என கேட்டிருக்கிறார் பழனிசாமி. கடந்த 30-ஆம் தேதி தலைமைச் செயலகத்தில் நடந்த தமிழ்நாடு முழுமைக்கான மழை தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் துரைமுருகன், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், நான் உள்ளிட்ட அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, ஐ.பெரியசாமி, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், செந்தில் பாலாஜி, மா.சுப்பிரமணியன், சேகர் பாபு, அனிதா ராதாகிருஷ்ணன், தா.மோ.அன்பரசன் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டோம்.

தூங்கிக் கொண்டிருந்த பழனிசாமியை யாரோ எழுப்பி தேர்தல் வரப்போகிறது தினசரி அறிக்கை விடுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள் போலிருக்கிறது. அதனால் இப்படி அற்பமான காரணங்களைச் சொல்லி அரசியல் செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார் பரிதாபமான பழனிசாமி.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

---

தியாகதுருகம் அரசு பள்ளியில்

# 774 மாணவர்களுக்கு இலவச மிதி வண்டி!

## வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

தியாகதுருகம், அக்.16–

கள்ளக்குறிச்சி மாவட்டம், தியாகதுருகம் அரசினர் ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளிகளில் தமிழக அரசின் விலையில்லா மிதி வண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி 14.10.2024 திங்கள் கிழமை அன்று நடைபெற்றது,இந்த நிகழ்ச்சியானது மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த் தலைமையில் நடைபெற்றது,இதில் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு 774 மாணவ – மாணவிகளுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதி வண்டிகளை வழங்கி திராவிட மாடல் அரசின் பல்வேறு திட்டங்களை பற்றி எடுத்துரைத்து பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது:–

திராவிட மாடல் அரசின் சார்பில் பள்ளி மாணவர்களுக்கென பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது,அதில் இலவச பேருந்து பயண அட்டை, விலையில்லா சீருடை, பாடப்புத்தகங்கள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுடன் விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது, இப்பொழுது 12ஆம் வகுப்பு படிக்கும் நீங்கள் அனைவரும் உயர் கல்வியில் சேர்ந்து படிக்க வேண்டும்,12ஆம் வகுப்பு படித்த மாணவர்கள் அனைவரும் உயர்கல்வி பயில வேண்டும் என்பதற்காக நமது திராவிட மாடல் அரசின் சார்பில் கல்லூரி கனவு, உயர்வுக்குப்படி, நான் முதல்வன் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதைத்தவிர புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் அரசு பள்ளியில் 6ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்த பெண் பிள்ளைகளுக்கு மாதம் ரூபாய் 1,000 வழங்குகின்ற உன்னதமான திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது, அதுமட்டுமில்லாமல் தற்போது தமிழ்ப் புதல்வன் திட்டத்தின்கீழ் அரசுப் பள்ளியில் 12ஆம் வகுப்பு வரை படித்து உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதம் ரூ.1,000/ வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது,மேலும் ஆதிதிராவிடர் நலத்துறை, பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத் தப்பட்டோர் நலத்துறை ஆகிய துறைகளின் மூலம் அந்தந்த வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகைகள் வழங்கப்பட்டு வருகிறது,குடும்ப சூழ்நிலைக் காரணமாக உயர்கல்வியை நிறுத்தி விடக் கூடாது என்பதற்காக நமது திராவிட மாடல் அரசின் சார்பில் இத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் பெண்கல்வியை ஊக்குவிப்பதற்கென நான் முதல்வன், புதுமைப் பெண் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள், விவசாயத்தை தவிர பெண்கள் பணிபுரிவது இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும், ஆகவே திராவிட மாடல் அரசின் சார்பில் நமது தமிழக முதல்வர்,கழகத் தலைவர்,சமூக நீதி காவலர்,திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்,அவருக்கு உறுதுணையாக எந்நேரமும் அயராது உழைத்துக் கொண்டிருக்கும் நமது தமிழக துணை முதல்வர்,கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் மாணவர்களுக்கான பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடைபெற்று,அதன் மூலம் மாணவர்களின் வளர்ச்சிக்கு பல்வேறு திட்டங்களை நடைமுறைப் படுத்தி வருகிறார்,மேலும் அரசு பள்ளியில் பயிலும் அனைவரும் 100 சதவீதம் தேர்ச்சி பெற்று உயர் கல்வி பயில வேண்டும்.

எனவே மாணவ – மாணவிகள் அனைவரும் இத்திட்டங்களை பயன்படுத்திக் கொண்டு நன்கு கல்வி கற்று சிறந்த குடிமகனாக உருவாக வேண்டும்,மேலும் ஆசிரியர்கள் கற்றுக்கொடுக்கும் பாடங்களை நன்கு கற்று வாழ்வில் உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ திராவிட மாடல் அரசின் பல்வேறு திட்டங்களை எடுத்துரைத்து பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் இரா.புவனேஸ்வரி பெருமாள், முதன்மை கல்வி அலுவலர் கார்த்திகா, தியாகதுருகம் ஒன்றியக் குழுத்தலைவர் ந.தாமோதரன், ஒன்றியக் குழுத் துணைத்தலைவர் இரா.நெடுஞ்செழியன் மற்றும் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் – ஆசிரியர் கழகத் தலைவர்கள், பள்ளி மேலாண்மை குழு தலைவர்கள், மாணவ, மாணவியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்தின் பயன்பாடுகள்!

# ஏற்காடு - கொண்டையனூரில் பொதுமக்களிடம் ஆய்வு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் மேற்கொண்டார்!

ஏற்காடு,அக்.16-

மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் பயன்பாடுகள் குறித்தும், மலை கிராமங்களுக்கும் அனைத்து மருத்துவச் சேவைகளும் சென்றடைவதை உறுதி செய்யும் வகையிலும், சேலம் மாவட்டம், ஏற்காட்டின் கடைகோடி கொண்டையனூர் மலை கிரா மத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் (13.10.2024) அன்று இரவு திடீர் ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்விற்கு பின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பொதுமக்கள் அனைவருக்கும் தரமான மருத்துவ சேவைகள் கிடைக்கப் பெற்று வருவதை தொடர் ஆய்வுகள் மூலம் உறுதிசெய்யப்பட்டு வருகிறது. அந்தவகையில் நேற்றையதினம் சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டத்தின் கடைகோடி கொண்டையனூர் மலை கிராமத்தில் அங்குள்ள பொதுமக்களிடம் மக்களைத் தேடிமருத்துவம் திட்டம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வின் போது தொடர்ந்து 3 ஆண்டுகளாக மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் வாயிலாக மருந்து, மாத்திரைகள் இங்குள்ள பொதுமக்களுக்கு தொடர்ந்து வழங்கப்பட்டு இருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியினை தெரிவித்தார்கள். இம்மலைகிராம மக்களுக்கு மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் சென்றடைந்திருப்பது முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு மிக்க சிறப்பான திட்டங்களுக்கு சான்றாகும்.

ஏற்காட்டின் கொண்டையனூர் கிராமத்தில் உள்ள ஒவ்வொரு வீடாக சென்று ஆய்வு செய்த போது 600-க்கு மேற்பட்ட பொதுமக்கள் வசிக்கும் கிராமத்தில் 10 -க்கும் மேற்பட்டோர் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் பயனாளிகளாக இருந்து வருகின்றனர். அதே போன்று ஏற்காட்டில் வசிக்கும் 99.5 சதவிகித மக்கள் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத் தின் கீழ் பயனடைந்து வருகின்றனர்.

தமிழ்நாட்டின் இந்த திட்டம் உலகின் ஒரு முன் மாதிரியாக கடைக்கோடி மனிதனுக்கும் மருத்துவ சேவையினை வழங்கி வரும் திட்டமாய் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்திற்கு ஐக்கிய நாடுகள் சபை 2024 ஆண்டிற்கான விருதினை வழங்கியுள்ளது.

முதலமைச்சர் அவர்களால் 2021 ஆகஸ்டு திங்கள் 5 - ஆம் நாள் தொடங்கப்பட்ட இத்திட்டம் 1.95 கோடி பயனாளிகளை கடந்து உலகின் எந்த நாட்டிலும் செயல்படுத்தப்படாத திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு திட்டம் தொடங்கி வைக்கப்பட்ட பிறகு அந்த திட்டம் தொடந்து செயல்படுத்தப்பட்டு வருகிறதா என்று முதலமைச்சர் கண்காணிப்பின் அடிப்படையில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதால் ஐக்கிய நாடுகள் சபை 2024 ஆண்டிற்காக விருதினை மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்திற்கு வழங்கியுள்ளது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

---

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில், எல்.பி.எஃப்.மோகன் தலைமையில்

# 450 மாற்றுத் திறனாளிகளுக்கு நலஉதவிகள் - பணமுடிப்பு!

## அமைச்சர் கே.என்.நேரு வழங்கினார்!

சென்னை, அக்.16-

பவளவிழா ஆண்டின் கழக முப்பெரும் விழாவை முன்னிட்டு மாவட்ட செயலாளர் -அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் எல்.பி.எஃப்.மோகன் தலைமையில் 10 மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர மோட்டார் வாகனமும் 450 மாற்றுத் திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் ரொக்கம் 2000த்தையும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு வழங்கினார்.

சென்னை கிழக்கு மாவட்டம், ஆதிதிராவிடர் நலக்குழு திமுக சார்பில் பவள விழா ஆண்டின் முப்பெரும் விழாவின், திராவிடத் தொடர்-16வது நிகழ்ச்சியாக "வாழும் திறனில் தெளிவானவர்! மாற்று சக்தியின் வலுவானவர்! என்ற தலைப்பில் 14.10.2024 திங்கள்கிழமை அன்று சென்னை, கொரட்டூர், பாடியில் உள்ள மோகன் கார்டன் திருமண மண்டபத்தில் நடைபெற்ற நலத் திட்ட விழாவில், சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில் சென்னை கிழக்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அணி அமைப்பாளர் எல். பி.எஃப்.மோகன் தலைமையில் நடைபெற்ற விழாவில் 10 மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர மோட்டார் வாகனமும் 450 மாற்றுத் திறனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகள் மற்றும் ரொக்கம் 2000த்தையும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என் நேரு அவர்கள் வழங்கினார்.

இந்நலத்திட்ட விழாவில் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல் பகுதி கழக செயலாளர்கள் டி. எஸ்.பி ராஜகோபால், எம். டி.ஆர்.நாகராஜ் தலைமைச் செயற்குழு உறுப்பினர் பி.கே.மூர்த்தி மற்றும் மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக்கழக செயலாளர்கள், பகுதிக்கழக நிர்வாகிகள், வட்டக்கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னாடிகள், செயல்வீரர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



பவளவிழா ஆண்டின் கழக முப்பெரும் விழாவை முன்னிட்டு மாவட்ட செயலாளர் –அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் எல்.பி.எஃப்.மோகன் தலைமையில் 10 மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர மோட்டார் வாகனமும் 450 மாற்றுத் திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் ரொக்கம் 2000த்தையும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு வழங்கினார்.

---

கனமழை அறிவிப்பு: சென்னை – கதீட்ரல் சாலையில் உள்ள

# 'கலைஞர் நூற்றாண்டு பூங்கா' அக்.18 வரை செயல்படாது!

## தோட்டக் கலைத்துறை இயக்குநர் அறிவிப்பு!

சென்னை,அக்.16-

'கனமழை பெய்யும்' என அறிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, 'கலைஞர் நூற்றாண்டு பூங்கா' நான்கு நாட்களுக்கு செயல்படாது என தோட்டக் கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான செய்தி வெளியீடு வருமாறு:

சென்னை, கதீட்ரல் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு பூங்காவானது, சென்னை மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் காற்றுடன் கனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையத்தால் அறிவிக்கப்பட்டு ஆரஞ்சு மற்றும் சிவப்பு எச்சரிக்கை (Orange and Red Alert) விடுக்கப்பட்டுள்ளதால் பொது மக்களின் பாதுகாப்பு கருதி, 15.10.2024 செவ்வாய்க் கிழமை) முதல் 18.10.2024 வெள்ளிக்கிழமை வரை செயல்படாது என தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு தோட்டக் கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அறிவித்துள்ளார்.

---

# லேடி வில்லிங்டன் கல்லூரியில் அக்.21–இல் பி.எட். மாணவர் சேர்க்கை!

சென்னை, அக்.16–

சென்னை, லேடி வில்லிங்டன் கல்வியியல் கல்லூரியில் நேற்று (15.10.2024) நடைபெற இருந்த பி.எட் (தாவரவியல், விலங்கியல், வேதியியல், இயற்பியல்) மாணவர் சேர்க்கைகான கலந்தாய்வு கனமழை காரணமாக 21.10.2024 (திங்கள்கிழமை) அன்று நடைபெறும் என கல்லூரிக் கல்வி ஆணையர் தெரிவித்துள்ளார்.

